மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

8. சட்டமுன்வடிவு—ஆய்வு செய்தல்)

இந்திய முத்திரை, தமிழ்நாட்டு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு,

1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன் வடிவு ஆய்வு செய்தல். 1992 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 46/1992) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டுமென்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கோருவார். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாட்டு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/1992) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்." எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்).

மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

@ 5-5-92 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்.)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை.)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாட்டு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 46/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2-15

7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் படாமல் ஒத்திவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக் கூட்டத்தை ஒத்திவைக்கும் பேரவை முன்னவரவர்களின் தீர்மானம்.